**MCOP No.68/2019**

**Date: 19.08.2024**

**ம.சா.1 அன்னராஜ்**

**3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து சமயம் நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண். TN 76 U 0786 ஆகும். 2 ம் எதிர்மனுதார் தான் உரிமையாளர் ஆவார். 1 ம் எதிர்மனுதார் நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு ஓட்டுநர் கிடையாது என்றால் சரிதான். நான் தான் ஓட்டுநர். 1 ம் எதிர்மனுதாருக்கும் 2 ம் எதிர்மனுதாருக்கும் முதலாளி தொழிலாளி என்ற உறவு கிடையாது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் வாகனத்தின் கட்டுப்பாடு என் வசம் தான் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயம் வாகனத்தை நிறுத்தியவுடன் வாகனத்தின் சாவியை நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் சாவியை எடுக்காதது என்னுடைய தவறு என்றால் சரியல்ல. அதனால் மாற்று வண்டியின் உடைய 1 ம் எதிர்மனுதார் சாவியை எடுத்து சென்றதால் என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாகனத்தின் சாவியை நான் எடுக்காததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாருக்கு விபத்து சமயம் ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கீறீர்கள் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதார் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்று காப்பீட்டு கழகத்தை தவறாக பயன்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்காக நஷ்ட ஈடு வழங்க 2 ம் எதிர்மனுதார் கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதார் நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மனுவிலும் நிருபண வாக்குமூலத்திலும் மாத வருமானம் ரூ.6000/- என்று நான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காயம்பட்ட நேரம் மருத்துவமனை செல்வதற்காக ரூ.10 ஆயிரம் செலவாகியதாக கூறியுள்ளீர்கள் அதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

கூடுதல் சத்துணவு சாப்பிட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு சிகிச்சை அளித்த போது உங்களுடன் இருந்த நபர்களை பற்றி மனுவிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். எதிர்கால மருத்துவ செலவுகள் குறித்து மருத்துவ அதிகாரிகள் வழங்கிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் ஏற்பட்ட காயங்கள் குறித்து ஊனச்சான்று குறித்து மருத்துவ சான்றிதழ் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். விபத்து நடந்த சமயம் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதார் எந்தவித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதார் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நீங்கள் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகையும், வட்டி தொகையும் அதிகப்படியானது என்றால் சரியல்ல. மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**